## இணைப்பு–2

**கதை சுருக்கங்கள்:**

### பெனோ




பிறக்கும் போது சந்தோஷமாக பிறந்தார். அவரது பெற்றோருக்கு அவளது கண்களில் ஒளியில்லை என உணர்ந்த பிறகு துயரத்தில் விழுந்தது குடும்பம், இருந்தாலும் மருத்துவம் கை விரித்தாலும், அவளின் அறிவு பள்ளிப்படிப்பு தொடங்கி கல்லூரி படிப்பு வரை எதிலும் முதலாய் முன்னேற வைத்தது. மகளின் அறிவு பெற்றோரை மகிழ்ச்சி கடலில் நீந்த வைத்தது அவளது கல்லூரி அவளின் கனவுகளுக்கு விதையாய் இருந்தது, ஒளியில்லாத விழி அதற்கு வழி தந்த பிரையில் வழி கல்வி, பெனோவின் கனவு அரசின் குடிமை தேர்வில் வெற்றி பெற வேண்டும் என்பதே, அது அவளுக்கு சாத்தியமா என்பது கேள்விக்குறி, காரணம் தேர்வுக்கான புத்தகம் விழி இழந்தோர் படிக்கின்ற பிரையில் வழியில் இல்லை. சர்வதேச நாடுகளில் பங்குபெற்ற ஒரு நிகழ்வில் வசந்தம் போல் முதன்மையானவள் முதல் குடிமை தேர்வில் 20 மதிப்பெண்களில் தோற்றவள் அடுத்த குடிமை தேர்வில் 1122 பேர் எழுதினார்கள் அதில் பெனோ 343 வது நபராக வந்து இந்திய ஆட்சி பணிக்கு பெருமை சேர்க்க நின்றாள் அதையும் தன் தொழில் நுட்ப அறிவால் வென்று காட்டினாள் இப்பொழுது இந்திய அரசின் வெளி உறவு துறை அதிகாரி. பெற்றோர்கள் ஆனந்தத்தில் பார்ப்பவர் ஒவ்வொருவரும் ஊனம் தடையில்லை ஊன்றுகோலாய் அறிவுத் துணை இருந்தால் என்பதுதான் பெனோ நமக்கு சொல்லும் பாடம்.

### பஸ்

சிறப்பு குழந்தைகளின் சிலர் கற்பனை செய்து கொண்டு பயணிக்கின்ற காட்சி தான் ஆனால் ஒரு ஸ்பீட் பிரேக் வந்த போது அவர்களின் கூர்மை அதுவே அவர்களின் ஆளுமை.

